# நகர் ஊரமைப்பு துறை

**உதவி இயக்குநர் /உறுப்பினர் செயலர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கடலூர் அவர்களின் நடவடிக்கைகள்**

**முன்னிலை: திருமதி. K.உமாராணி,பி.இ.,**

ந.க.எண்.665/2022/க.மா — நாள்:26.07.2022

பொருள் : குடியிருப்பு கட்டிடம் - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – கடலூர் மாவட்டம் – குறிஞ்சிப்பாடி வட்டம் - குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம் - வடக்குத்து கிராமம், சர்வே எண்:495/36, 495/44 (பழைய சர்வே எண்.15/1A1A, 15/4A1A)-ல், 900.00 ச.மீ பரப்பளவுள்ள மனையிடத்தில் உத்தேச குடியிருப்பு கட்டிடம் கட்ட நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 47A-ன்கீழ் கட்டிட அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. மனுதாரர் திரு.V.அன்பழகன், பண்ருட்டி அவர்களின் கடிதம் நாள்.24.03.2022.(இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.24.03.2022.
2. அரசாணை எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள். 28.03.2012.
3. அரசாணை எண்.85, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள். 16.05.2017.
4. அரசாணை (நிலை) எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள். 04.06.2004.
5. அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019
6. அரசாணை (நிலை) எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020
7. அரசாணை (நிலை) எண்.18, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்.04.02.2019
8. அரசாணை (நிலை) எண்.31, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்.31.01.2020.
9. அரசாணை (நிலை) எண்.54, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்.12.03.2020.
10. அரசாணை (நிலை) எண்.1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்.05.01.2022.
11. அரசாணை (நிலை) எண்.19, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்.02.03.2022.
12. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 7486/2009பிஏ2, நாள். 16.04.2009.
13. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 21705/2009/பிஏ1, நாள். 27.06.2012
14. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 12201/2017/ பிஏ1, நாள். 22.09.2017.
15. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 14227/2017/ சிபி, நாள். 14.12.2017

16. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 4367/2019/ பிஏ2, நாள். 05.02.2020.
17. அரசு தலைமைச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சென்னை அவர்களின் கடிதம் எண்.8449/நவ4(3)-2020-2, நாள்.23.09.2020.
18. நகர் ஊரமைப்பு இயக்குநர்(மு.கூ.பொ), சென்னை,அவர்களின் கடிதம் ந.க.எண்.7671/2020.2, நாள்.25.09.2020.
19. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 4367/2019/ TCP2, நாள்.14.08.2021
20. அரசு முதன்மை செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, சென்னை - 19 அவர்களின் கடிதம் ந.க.எண்.1689/நவ4(1) 2022-1, நாள்.02.02.2022.
21. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2258/2022/TCP1, நாள்.14.02.2022.
22. அரசு முதன்மை செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, சென்னை - 19 அவர்களின் கடிதம் ந.க.எண்.1858/UD2/2022-1, நாள்.21.04.2022.
23. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 7963/2022/ K1, நாள்.23.04.2022
24. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.15.07.2022 மற்றும் (கட்டணங்கள் செலுத்தக் கோரியது)
25. மனுதாரரால் உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்டு இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.25.07.2022

-------------

<u>உத்தரவு</u>

பார்வை 1-ல் கண்ட மனுதாரின் கடிதத்தில், கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், வடக்குத்து கிராமம், சர்வே எண்:495/36, 495/44 (பழைய சர்வே எண்.15/1A1A, 15/4A1A)-ல், 900.00 ச.மீ பரப்பளவுள்ள மனையிடத்தில் உத்தேச குடியிருப்பு கட்டிடம் கட்ட கட்டிட அனுமதி கோரி பெறப்பட்ட உத்தேசம் பரிசீலிக்கப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது.

<u>மனையிடத்தின் பரப்பளவு</u>

மனையிடத்தின் பரப்பளவு = **900.00 ச.மீ**

| S. No. | Floor Name | Total Builtup Area Sqm | FSI Area (Sqm) | Non FSI Area (Sqm) |
|---|---|---|---|---|
| 1. | Stilt Floor | 529.59 | - | 529.59 |
| 2. | First Floor | 529.59 | 499.03 | 30.56 |
| 3. | Second Floor | 529.59 | 499.03 | 30.56 |
| 4. | Third Floor | 529.59 | 499.03 | 30.56 |
| 5. | Fourth Floor | 529.59 | 499.03 | 30.56 |
| 6. | Fifth Floor | 529.59 | 499.03 | 30.56 |
| 7. | Terrace Floor | - | - | 38.42 |
| 8. | Total | **3177.54** | **2495.15** | **720.81** |

$$\textbf{FSI Area} = \frac{2495.15}{900} = 2.77$$

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், வடக்குத்து கிராமம், சர்வே எண்:495/36, 495/44 (பழைய சர்வே எண்.15/1A1A, 15/4A1A)-ல், 900.00 ச.மீ பரப்பளவுள்ள மனையிடத்தில் உத்தேச குடியிருப்பு கட்டிடம் அமையவுள்ள மனைக்கு **"A to D"**என எல்லையிட்டு அம்மனையில் அமையும் கட்டுமானத்திற்கு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 47A-ன் கீழ் **கட்டிட அனுமதி எண்:08/2022** என எண்ணிடப்பட்டு **26.07.2022** முதல் **25.07.2030** வரை எட்டு வருட காலத்திற்கு கீழ்காணும் சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

பார்வை (20) மற்றும் (21)-ல் கண்டுள்ள அரசு கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு உத்தேச கட்டிடம் அமையவுள்ள இடமானது நீர்நிலைகள் ஏதும் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை என்பது குறித்து மனுதாரரிடமிருந்து ரூ.20/-க்கான முத்திரைத்தாளில் உறுதிமொழி பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து உத்தேச கட்டிடத்திற்கு கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

பார்வை (25)-ல் கண்டுள்ள கடிதத்தில் 25.07.2022 மனுதாரரால் கட்டணங்கள் செலுத்தப்பட்டு அதற்கான அசல் செலான் பெறப்பட்டுள்ளது. இதில் மனுதாரர் OSR கட்டணம், Security Deposit, CCC கட்டணம், Display Board, Shelter Fund, I&A, நன்னிலை வரி மற்றும் கொடி நாள் கட்டணம் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

சிறப்பு நிபந்தனைகள்

1. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequancy of the foundations.

2. மத்திய மற்றும் மாநில அரசு துறையினிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

3. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

4. Applicant should obtain consent from Tamil Nadu Pollution Control Board under section 25 of the Water Act 1974 for discharge of sewage.
5. பார்வை-7ல் கண்ட அரசாணையின்படி கட்டுமானம் Plinth level அடைந்தவுடன் தொடர் கட்டுமான பணிகள் மேற்கொள்வதற்கு முன், Construction Continuance Certificate பெறுவதற்கு மனுதாரர் இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். இச்சான்றிதழ் பெற்ற பின்னரே கட்டுமானப் பணி தொடர்ந்திட வேண்டும். மேலும், கட்டுமானப் பணி முழு வடிவில் முடிந்த பின்னர் பணி முடிவு சான்று (Complete Certificate) பெறப்பட வேண்டும். இச்சான்று பெறப்பட்ட பின்தான் வழக்காமான பயன்பாட்டு இணைப்புகள் (Regular Utility Connection)பெற இயலும்.

6. The Tamil Nadu Government in G.O.Ms.112, Housing and Urban Development Department, Dated:22.06.2017 have approved the Tamilnadu Real Estate (Regulation & Development)Act 2016. The promoter has to advertise, Market, book, sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building,

as the case may be in any Real Estate Project or part of it only after registering the real estate project with the Real Estate Regulatory Authority".

64

7. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரின் பெயரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தாமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

8. The provisions in the G.O.(Ms).No.17, Housing and Urban Development (UD4(3) Department dated:05.02.2016, relating to installation and use of solar energy system should be followed.

<u>நிபந்தனைகள்</u>

1. உத்தேச குடியிருப்பு கட்டிட உபயோக கட்டுமானத்திற்கு Solar Water Heating system அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.18 மற்றும் 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் 31.01.2020-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளிவரும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிற்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதி படி தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றம் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03.11.2004-ன்படி செப்டிக் டேங்கில் 'U' Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுசூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

117

11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும் போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகலுடன் ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்தரவு மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.
13. உத்சேம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water Act)-ன்படி மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்பட வேண்டும்.
14. கீழ்கண்டுள்ளவாறு சிறப்பு நிபந்தனையின் பெயரில் திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

உத்தேச குடியிருப்பு கட்டிடத்திற்கு தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகளுக்குட்பட்டு கட்டிட அனுமதி வழங்குமாறு ஊராட்சி மன்ற தலைவர், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், வடக்குத்து கிராமம் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மனுதாரர் இறுதி ஒப்புதல் பெற ஊராட்சி மன்ற தலைவர், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், வடக்குத்து கிராமம் அவர்களை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒப்புதலளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை சான்றினை இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு ஊராட்சி மன்ற தலைவர், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், வடக்குத்து கிராமம் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

<u>இணைப்பு-</u>
ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட தொகுப்புகள் -2.

26/7/2022

உதவி இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கடலூர் மாவட்டம்.

<u>பெறுநர் :</u>
ஊராட்சி மன்ற தலைவர்,
குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம்,
வடக்குத்து கிராமம்,
கடலூர் மாவட்டம்.

<u>நகல் :</u>
திரு. V.அன்பழகன், S/o வாசுதேவன்,
P/A of திரு. C.R.ஜெயசங்கர் S/o C.இராஜகோபாலன்,
எண்.56, கிழக்கு தெரு, கீழக்கொல்லை,
மருங்கூர் அஞ்சல்,
பண்ருட்டி வட்டம்,
கடலூர் மாவட்டம் – 607 103

இருப்புக்கோப்பு - 1

# ஊராட்சி கட்டிட அனுமதி உத்திரவு

வடக்குத்து ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை. திருமதி கு.அஞ்சலை தலைவர்
வடக்குத்து ஊராட்சி
குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம்

எண். நாள் 28-09-2022

பொருள்:– புதிய கட்டிடம் கட்ட / மாற்றம் செய்ய / கூடுதல் கட்டிடம் கட்ட / சீர் செய்து கட்ட அனுமதி கோரியதன் பேரில் திரு. ஜெயமாலினி கம்பெனி என்பவருக்கு வரைப்பட ஒப்புதல் தந்து கட்டிட அனுமதி வழங்குதல். C.R. ஜெயசங்கர் த/பெ ராஜகோபால்

பார்வை:–
1. திரு. ஜெயமாலினி கம்பெனி, C.R. ஜெயசங்கர், த/பெ ராஜகோபால்
2. அரசாணை நிலை எண் 255 ஊ.வ (சி 2) துறை நாள் 18.08.1997.
3. ஊராட்சி தீர்மான எண் 97 நாள் 26-09-2022

❖❖❖❖

**உத்தரவு**

வடக்குத்து ஊராட்சி எல்லைக்குட்பட்ட [illegible] கிராமத்தில் தங்களுக்கு சொந்தமான புல எண் 495/36, 495/44 இல் ........ ஏர்ஸ்/செண்ட் இடத்தில் கட்டிடம் அமைக்க / மாற்றம் செய்ய / கூடுதல் கட்டிடம் அமைக்க / சீர் செய்து கட்ட தாங்கள் அளித்திருந்த வரைபடம் அடியிற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்புதல் செய்யப்பட்டு கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

## நிபந்தனைகள்

1. கட்டிடத்திற்கு எந்தப்புறம் வீதியிருந்தாலும், அந்த வீதியை ஒட்டி 4 அடி காலியிடம் விட்டு கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
2. பொது தெருவில் படி, சாக்கடை தொட்டி, சுற்றுச் சுவர்கள் முதலான எந்த ஆக்கிரமிப்பும் கூடாது. கல் மணல் கட்டுமானப் பொருட்கள் தெருவின் ஆக்கிரமிக்கும் வகையில் சேகரித்து வைக்கக்கூடாது.
3. கட்டிடத்தில் வைக்கப்படும் நிலைக்கதவுகள் 6 அடிக்கு 3 அடி, ஜன்னல்கள் ஒரு அடிக்கு 3அடி அளவுகளுக்கு குறைவு படாமல் அமைக்கப்பட வேண்டும்.
4. வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள இடத்தில் சிமெண்ட் காங்கிரிட் தளம் போட்ட மலக்கழிப்பறை ஒன்றும் சாக்கடைத் தொட்டி ஒன்றும் அமைக்கப்பட வேண்டும்.
5. சமையல் அறையில் அடுப்புக்கு மேலே புகைபோக்கி ஒன்று அமைக்கப்பட வேண்டும்.
6. மழை நீர் சேகரிப்பு தொட்டி நிறுவப்பட வேண்டும்.
7. கட்டிடம் கட்டி முடித்த விபரம் அலுவலகத்திற்கு தெரியப்படுத்தி 1939–ம் வருடத்தில் தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் 26 மற்றும் 33வது பிரிவுகளின் படி சான்றிதழ் பெற்ற பிறகு தான் குடியேற வேண்டும்.
8. அனுமதி கொடுத்த கால கெடுவுக்குள் கட்டிடம் முடிக்கப்பட வேண்டும் தவறினால் திருத்தப்பட்ட மறு வரைபடம் அனுப்பி புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட வரை படத்திற்கு மாறுதலாகவோ அல்லது அதில் கண்ட நிபந்தனைகளுக்கு எதிரானதானகவோ கட்டிடம் கட்டப்படுமாயின் கண்டிப்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படுவதுடன் கண்டிப்பாய் அக்கட்டிடம் ஊராட்சி மூலம் இடிக்கப்படும்.
9. கொடுக்கப்பட்டிருக்கும் அனுமதிக்காலம் 28.09.2022 முதல் 27.09.2023 வரை அமுலில் இருக்கும்.

## சிறப்பு நிபந்தனைகள்

1. மேற்குறிப்பிட்ட கட்டிடம் கட்டுவது வில்லங்கம் ஏதேனும் ஏற்படுமாயின் மேற்படி கட்டிட வரைபடம் ஏற்பளிப்பும், அனுமதியும் நீதிமன்ற தீர்ப்பளிப்பிற்கு உட்பட்டதாகும்.
2. மேற்படி கட்டிடம் புறம்போக்கு இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டக்கூடாது அவ்வாறு ஏதேனும் தெரியவந்தால் இவ்வரைபட ஏற்பளிப்பும், அனுமதியும் ரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்.

**இணைப்பு:** அங்கீகரிக்கப்பட்ட வரைபட நகல்

**பெறுதல்**

திரு. ஜெயமாலினி கம்பெனி,
C.R. ஜெயசங்கர் த/பெ ராஜகோபால்
[illegible].

K. அஞ்சலை
தலைவர்
வடக்குத்து ஊராட்சி
குறிஞ்சிப்பாடி ஒன்றியம்